முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 07.04.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 07.04.2026 | சாட்சி | பி.வா.சா. 3 |
| பெயர். | அன்பழகன் | வயது.. | 69 |
| தந்தை பெயர். | ராமசாமி | ஊர்.. | பெரியமேடு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

3. நான் 1ம் பிரதிவாதி ஜெயலட்சுமியிடமிருந்து 22.03.1989 -யில் வழக்கு சொத்தை கிரயம் வாங்கினேன். கிரயம் வாங்கும் போது வில்லங்கம் பார்த்தேனா என்றால் என் அப்பா தான் கிரயம் வாங்கினார் கிரயம் வாங்கி என் பெயரில் எழுதினார் என் அப்பா வில்லங்கம் பார்த்தாரா என்று தெரியாது, அப்போது நான் அண்ணாமலை பல்கலைகழகத்தில் படித்து கொண்டிருந்தேன். வழக்கு சொத்து 2-3 இனமாமன புல எண்.102/11A, 102/11B, உட்பிரிவுக்கு முன்பு 102/13 27 1/4 செண்ட் ராமலிங்கம் படையாட்சி குமாரர் சுப்பிரமணியம் படையாட்சிக்கு எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. அது சம்மந்தபட்ட ஆவணங்களை இப்போது தான் நான் பார்த்தேன். சுப்பிரமணிய படையாட்சியும் எனது தகப்பனாரும் 16.08.1978-இல் பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றாலும் வா.சா.ஆ.1 பத்திரம் இருக்கும் போது மேற்சொன்ன பரிவர்த்தனை செல்லதகாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.